# பண்டுவஸ்நுவர பிரதேச சபை

# குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 19 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 10 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான உள்ளவாறான கடை வாடகை பில போடப்பட்டவை ரூபா 4,734,912 தொகை எனினும் வருமான செலவுக் கணக்குகளில் அவை ரூபா 5,070,562 என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 335,650 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டு தொடர்பாக சுற்றாடல் வைப்புகள் வருமானம் ரூபா 54,000 இனை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான சுற்றாடல் வைப்புக்கள் வருமானம் ரூபா 74,375 இனை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்காக மீளாய்வாண்டு தொடர்பாக ரூபா 121,032 இற்கான தவணைப் பணம் கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டிற்கான செலவுகள் அதே தொகையான குறைவாக காட்டப்பட்டிருந்தது. அதே போல் மீதி உறுதிப்படுத்தும் சான்றிதழின் பிரகாரம், வருட இறுதியில் உள்ளவாறு ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,222,798 தொகை எனினும்,

ஐந்தொகையில் அவை ரூபா 2,860,475 என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான கடன்கொடுத்தோர் ரூபா 362,323 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2012 நவம்பர் 01 திகதி முதல் 2013 ஜனவரி 31 திகதி வரையான காலப்பகுதி தொடர்பாக 2013 ஜூன் மாதத்தில் பெற்றிருந்த ரூபா 6,538,956 இற்கான நீதிமன்ற தண்டப் பணத் தொகையில் முன்னைய ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான தொகைகளை வெவ்வேறாக இனங்காணப்படாமல் முழுத் தொகையும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) வருட இறுதியில் உள்ளவாறு பௌதீக ரீதியாக காணப்படும் இருப்பினை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், வருட இறுதி இருப்பு என முன்னைய ஆண்டில் காணப்பட்ட ரூபா 1,193,213 இற்கான தொகையினை பிழையான முறையில் நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருந்தன.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

------------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையினை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 2,860,476 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான இறுதி மீதியின் கீழ் 3 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் நேரொத்த பெறுமதியிடையே ரூபா 4,334,204 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டன.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 67,626,726 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 65,251,726 தொகை தொடர்பாக காலப்பகுப்பாய்வு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 55,105,798 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 8,353,385 தொகை 3 வருடங்களை விட பழமையான மீதிகளாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 12,021,201 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் பற்றி விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,902,422 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,042,545 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 23,944,967 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 42,697,236 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 55,554,426 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போதும் மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 1,045,232 வரை குறைந்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 74,961,826 இல் நூற்றிற்கு 53 ஆகிய ரூபா 40,001,752 உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 42,697,236 இற்கான மொத்தத் தொகையும் மகநெகும, மாகாண முதலீடு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் உதவி போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 61,059,404 இல் நூற்றிற்கு 51 ஆகிய ரூபா 31,132,761 தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. அவற்றில் நூற்றிற்கு 70 ஆக ரூபா 21,872,469 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 55,554,426 இல் நூற்றிற்கு 18 ஆகிய ரூபா 9,898,685 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதி 82 ஆகிய ரூபா 45,655,741 தொகை மகநெகும, மாகாண முதலீடு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் உதவி ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் ஆகும்.

2.3 வருமான நிருவாகம்

--------------------------------

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வர்த்தக வரி, கடை வாடகை, குத்தகை ஆகிய வருமான வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகள் விதித்தில்லாத போதிலும், சபையின் வருமானத்தை சேகரிப்பாளர்களினால் ஆண்டு பூராகவும் வீதவரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம் வெளிக் களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

------------

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 32 – 42 வரையான விதிகளின் பிரகாரம் காலாண்டு அடிப்படையில் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு, குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கிய பின்னர் ஆவணங்களை தடை செய்து நிலுவை வீதவரியினை அறவீடு செய்யும் செயற்பாடுகள் அமுலாக்க வேண்டியிருந்தது எனினும் வீதவரி அறிவித்தல் விநியோகித்தல் மற்றும் வெளிக்களத்தில் வருமானம் சேகரித்தல் போன்ற செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

2.3.3 வாடகை

-------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக குறைந்த விலை கூறல் ரூபா 988,945 இற்கான 30 சொத்து விடயங்கள் தொடர்பாக மூன்று முறை கூறுவிலைகள் கோரப்பட்ட போதும் வாடகைக்கு கொடுப்பதற்கு முடியாதுள்ளது.

(ஆ) ஹெட்டிபொல கோழி இறைச்சிக் கடையின் 2007 ஆண்டிற்கான ரூபா 41,975 நிலுவை ஒன்று காணப்பட்டது.

(இ) ஹெட்டிபொல மாட்டிறைச்சிக் கடையின் 2006 ஆண்டு தொடர்பாக காணப்பட்ட ரூபா 151,125 நிலுவை தொடர்பான வழக்கு தீர்ப்பின் பிரகாரம் வாடகையாளரின் ஆதனங்களை விற்பனவு செய்து குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்யும்படி கட்டளையிட்டிருந்த போதும் அப்பணத்தினை அறவீடு செய்திருக்கவில்லை. மடிகே அனுக்கனே மாட்டிறைச்சிக் கடையின் 2006 மற்றும் 2007 காணப்பட்ட நிலுவை ரூபா 146,020 இற்கான நிலுவை தொடர்பாக வழக்கின் வாடகையாளர் வெளிநாடு சென்றுள்ளதாக கோவையின் பிரகாரம் அறியக்கூடியதாக இருந்த போதிலும் இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆண்டின் போது வாடகை கொடுத்திருந்த பண்டுகபுர 5 கடைகளில் 3 இற்காக ரூபா 63,259 தொகையொன்று நிலுவையாக காணப்பட்டதுடன் பண்டுவஸ்நுவர 3 கடைகளில் வாடிக்கையாளர்கள் 2012 ஏப்ரல் அளவில் கடைகளை விட்டு சென்றுள்ளனர். அந்த 3 கடைகளையும் வேறு ஒரு நபர் பயன்படுத்தியிருந்த போதும் அந்த நபர் மற்றும் சபை இடையே கடை வாடகை தொடர்பாக உடன்படிக்கை ஒன்று காணப்படவில்லை. எனினும் சபை அதற்காக மாதாந்த பில் போடல் மேற்கொள்ளப்பட்டுள்ளமையில் அக்கடைகள் தொடர்பாக ரூபா 63,255 இற்கான நிலுவை மீதி ஒன்று ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த கடைகள் தொடர்பாக எழுத்துமூல உடன்படிக்கைகள் இன்மையால் குறிப்பிட்ட நிலுவைகள் தொடர்பாக சட்ட செயற்பாடுகள் மேற்கொள்ள முடியாத நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது.

(உ) ஹெட்டிபொல புதிய வர்த்தக தொடர் கட்டடத்தின் 12 ஆம் இலக்க கடைக்காக இரண்டு நபர்கள் ரூபா 776,000 மற்றும் ரூபா 693,100 வீதம் கூறுவிலைகள் சமர்பித்திருந்தனர். கடையினை வழங்கும் போது உறுதியான காரணம் குறிப்பிடப்படாமல் கூறுவிலையாகிய ரூபா 693,100 சபையினால் ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த கடைக்காக 2012 ஆண்டு இறுதி வரை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. அத்துடன் 2013 ஆண்டின் போது ரூபா 776,000 கூறுவிலை சமர்பித்திருந்த பெறுவோனுடன் ரூபா 693,100 விலைக்கே உடன்பட்ட வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(ஊ) ஆசிய அபிவிருத்தி செயற்திட்ட கடன் உதவியின் கீழ் ரூபா 41,128,218 தொகை ஒன்று செலவிடப்பட்டு 2011 ஆண்டின் போது நிர்மாணக்கப்பட்டிருந்த பல கருமங்களுக்கான கட்டடத்தில் காணப்பட்ட 9 கடைகளுக்காக 2013 இறுதி வரையும் வாடகை மதிப்பீட்டு அறிக்கை பெற்றிருக்கவில்லை. அதே போல் கடைகளை வாடகைக்கு கொடுக்கும் போது கேள்வி நடைமுறையையும் கடைபிடித்திருக்கவில்லை. அவ்வாறு இலங்கை வங்கிக்கு கொடுத்தருந்த 2 கடைகள் மற்றும் சம்பத் வங்கிக்கு வழங்கியிருந்த ஒரு கடையும் தொடர்பாக உடன்படிக்கை கையொப்பமிட்டு பாதுகாப்பு பிணையும் பெற்றிருக்கவில்லை. அதே போல் சுமார் 923 சதுர அடிகளை கொண்ட ஒரு கடை மீளாய்வாண்டு இறுதிவரையும் குறிப்பிட்ட கருமம் ஒன்றிற்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

2.3.4 வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்

--------------------------------------------------------------------------------------------

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 59 முதல் 67 வரை காணப்படும் விதிகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 150(1) மற்றும் 152(1) இன் பிரகாரம், கைத்தொழில்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு 7 நாட்களில் விதிக்கப்பட்ட வரியினை செலுத்துமாறு பி.ச. 26 படிவத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.5 நீதி மனறத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

--------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 2,683,995 ஆகும்.

2.3.6 நீர்க் கட்டணம்

------------------------

(அ) மீளாய்வாண்டின் அக்டோபர் இறுதி வரை நீர் வழுங்கல்கள் மற்றும் வடிகால் அமைப்பு சபையில் இருந்து 93,415 நீர் அலகுகள் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் அக்காலப் பகுதி தொடர்பாக 58,973 அலகுகளுக்கு மாத்திரம் சபையினால் பில் போடப்பட்டிருந்தமையால் 34,442 அலகுகளுக்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. அதனை மொத்த கொள்வனவு விலையுடன் ஒப்பிடும் போது ரூபா 619,956 இற்கான பெறுமதியினை பெறுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நீர் பில் போடப்பட்டவைகள் ரூபா 2,571,407 ஆக காணப்பட்டதுடன் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 1,277,940 ஆகும். கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது இப் பெறுமதியில் ரூபா 5,000 மிகையான 20 நிலுவை மீதிகள் காணப்பட்டதுடன் அவற்றின் கூட்டுப் பெறுமதி ரூபா 266,063 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயலாற்றுகை மதிப்பீடு

----------------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்காக திட்டமிட்டிருந்த ரூபா 738,000 பெறுமதியின் 05 நலன்புரி விடயங்களும் மற்றும் ரூபா 23,800,000 பெறுமதியான 05 அபிவிருத்தி விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

--------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1993 ஆண்டின் போது வயம்ப பிரதேச போக்குவரத்து சபையினால் சபைக்கு உரித்தாக்கப்பட்ட காணியில் அமைந்துள்ள கட்டடமொன்றில் வெளி சாரார் ஒருவரினால் அங்கீகாரம் இல்லாத வர்த்தக நிலையமொன்று நடத்தப்பட்டு வந்துள்ளது. அத்துடன் இது தொடர்பாக 2010 ஆண்டு முதல் காணப்பட்ட வழக்கு இதுவரை முடிவடைந்திருக்கவில்லை. மேலும் வாடகை ஏதும் செலுத்தாமல் குறிப்பிட்ட நபரினால் வியாபார நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவதானிக்கப்பட்டது. அதே போல் சபைக்கு சொந்தமான வலவ்வத்த காணியில் பொது வசதிகளுக்கான 49 பர்சஸ் காணி பகுதியில் அங்கீகாரமின்றி வதிபவர்களை அகற்றுவதற்காக 1996 ஆண்டு முதல் காணப்படும் வழக்கும் கணக்காய்வு சந்தர்ப்பம் வரை முடிவாகி இருக்கவில்லை.

(ஆ) சபையினால் 2007 – 2009 காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 308 கட்டட விண்ணப்பங்களில் மீளாய்வாண்டு இறுதிவரை இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்காத 298 இடங்கள் காணப்பட்டன. குறிப்பிட்ட கட்டடங்கள் அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததால் சபையின் துணைவிதியின் பிரகாரம் ரூபா 894,000 இன் இணக்கச் சான்றிதழ் வருமானமும் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு முடிவடைந்து இல்லாவிடின் அனுமதிப்பத்திரத்தின் காலத்தை நீடிப்பதன் மூலம் சபைக்கு ரூபா 785,500 வருமானம் ஒன்றினையும் அறவிட முடியுமாக இருந்தது. இது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) பல வருட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட தற்போது சேவையில் இல்லாத 18 ஊழியர்களின் ஊழியர் கடன் மீதி ரூபா 134,956 ஆக காணப்பட்டதுடன் இடமாற்றம் பெற்று சென்றுள்ள 04 ஊழியர்கள் தொடர்பாக அறவிடப்படாத கடன் மீதி ரூபா 214,622 ஆகும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆண்டின் போது ரூபா 277,500 செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த 2 கொங்கிரீட் கற்கள் உற்பத்தி இயந்திரங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட வேலைக்காகப் பயன்படுத்தப்படாமல் செயற்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) ஹெட்டிபொல பால் சேகரிப்பு நிலையம் நடத்தப்படும் காணியின் உரிமை சபைக்கு காணப்பட்ட போதும், தனிப்பட்ட தரப்பினரால் அந்த காணியில் கட்டடமொன்று

நிர்மாணிக்கப்பட்டு 2013 ஆண்டு இறுதி வரை வியாபார நடவடிக்கை நடாத்தியிருந்தனர். எனினும் 2014 ஆண்டின் போது கேள்வி கோரும் போது வேறு தரப்பினரினால் கேள்வியினை வருடாந்தம் ரூபா 14,550 தொகைக்கு வாடகைக்கு பெற்றிருந்த போதும் அந்த ஆதனத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புதிய வாடிக்கையாளருக்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சபைக்கு இயலாது காணப்பட்டது. அதே போல் சபையினால் குறிப்பிட்ட காணியின் மற்றும் கட்டடத்தின் உரிமையினையும் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

3.4 திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------

சபைக்கு சொந்தமான திண்ம கழவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டமொன்று காணப்படவில்லை. அத்துடன் பிரதேசத்தில் சேகரமாகும் குப்பைகளை தனிப்பட்டோரின் காணிகளில் புதைக்கும் முறைமையொன்று சபை கடைபிடித்து வந்துள்ளது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம், மீண்டுவரும் செலவுக்காக ரூபா 74,435,000 தொகையொன்று ஏற்பாடு ஒன்று காணப்பட்ட போதும் அவற்றில் நூற்றிற்கு 82 ஆன் ரூபா 61,056,000 செலவிடப்பட்டுள்ளது. அதே போல் மூலதன செலவுகளின் கீழ் ரூபா 73,910,000 இற்கான ஏற்பாடு ஒன்று காணப்பட்ட போதும் அவற்றில் நூற்றிற்கு 75 ஆன ரூபா 55,554,000 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிருவாகம்